**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

**<u>முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.</u>**

**<u>நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.</u>**

**<u>2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை</u>**

<u>STC.No. 98 - 2023</u>

<u>CNR.No. TNKI10 – 000619 - 2023</u>

M/s மகேந்திரா & மகேந்திரா பைனான்சியல் சர்வீஸ் லிமிட்,
Rep by its Power of Attorney holder & Deputy Manager,
P. சுரேஷ், த/பெ.பொன்னுசாமி,
அலுவலக முகவரி
Gateway பில்டிங், அப்பலோ பன்டர்,
மும்பை -400 001.
கார்பரேட் அலுவலகம் , சாதனா ஹவுஸ், II Floor,
570, P.B Marg, மகேந்திரா டவர்ஸ் அருகில்,
Worli, மும்பை 400018.

**கிளை முகவரி**

எண்.737/1 B, R.K டவர்ஸ்,
மாருதி நகர், பெங்களூர் மெயின் ரோடு,
NH-7, ஒசூர் தாலூகா,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635109 ... புகார்தாரர்

/Vs/

T. முருகேஷ்,
த/பெ. திம்மராயப்பா,
கதவு எண். 2 – 84, பேருந்து நிலையம் எதிரில்,

சப்படி கிராமம், கெலமங்கலம் சாலை,

அஞ்செட்டிப்பள்ளி அஞ்சல்,

ஒசூர் தாலுகா,

கிருஷ்ணகிரி மாவட்டம் 635110. ... எதிரி

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட**

**Roc.No.814/2020/RG/F1-ன் படி வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td colspan="3">எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள்</td><td>Nil</td></tr>
<tr><td>2.</td><td colspan="3">புகார் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>31.01.2023</td></tr>
<tr><td>3.</td><td colspan="3">முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள்</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td colspan="3">எதிரியிடம் கு.வி.மு.ச. 251 பிரிவின் கீழ் வினவிய நாள்</td><td>02.04.2024</td></tr>
<tr><td>5.</td><td colspan="3">இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் விவரம்</td><td></td></tr>
<tr><td></td><td>குற்றப்பல்வகை மனு எண்.</td><td>உத்தரவு அனுமதிக்கப்பட்டது /தள்ளுபடி செய்யப்பட்டது</td><td>மேல்முறையீட்டு வழக்கு விவரம்</td><td></td></tr>
<tr><td></td><td>-</td><td>-</td><td>-</td><td></td></tr>
<tr><td rowspan="2">6.</td><td colspan="3">சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்</td><td></td></tr>
<tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td><td></td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | திரு.சுரேஷ் (PW1) | 20.03.2023 | 25.06.2024 | பு.சா.1 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 23.09.2024 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | --- |

இவ்வழக்கு கடந்த 06.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.அனிதா அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வெங்கடேஷ் குமார் அவர்களும், ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 138-ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்கக்கோரியும், நஷ்ட ஈடு செலுத்தகோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2) **புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

2.1) எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் Mahindra XYLO D2, Reg No. KA01MH9588 என்ற வாகனத்தை Approved loan அடிப்படையில் loan account no.

6752148 -ல் 08.01.2020-ம் தேதி ரூ.3,00,000/-க்கு வாங்கியதாகவும், agreement தொகையாக எதிரி ரூ.4,30,918/- ஐ மொத்த தொகையாக செலுத்த வேண்டும் என்றும், எதிரி மாத தவணையாக ரூ.16,400/-ஐ 29 மாதங்களுக்குள் செலுத்துவதாக ஒப்புக் கொண்டதாகவும், புகார்தாரர் நிறுவனம் பலமுறை எதிரியிடம் கேட்டும், எதிரி தவணை தொகைகளை செலுத்தவில்லை என்றும், loan agreement-ன் நிபந்தனைப்படி புகார்தாரர் நிறுவனம் எதிரியின் வாகனத்தை பறிமுதல் செய்து கொண்டதாகவும், புகார்தாரர் நிறுவனம் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொண்டு விற்பனை தொகையை கழித்தது போக ரூ.3,03,666/- எதிரி நிலுவை தொகையாக செலுத்த வேண்டுமென்றும், மேற்படி கடன் தொகையை செலுத்தும் பொருட்டு full and final settlement ஆக எதிரி ரூ.2,80,000/-த்தை (இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, மேற்படி ரூ.2,80,000/-க்கு கடந்த 08.12.2022 தேதியிட்ட ICICI Bank, Hosur கிளையின் காசோலை எண் 331528 என்ற காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

2.2) மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான HDFC Bank Ltd, ஒசூர் கிளையில் கடந்த 09.12.2022 அன்று வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலையானது கடந்த 12.12.2022 -ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், அதன் பின்னர் 22.12.2022 -ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை எதிரி 02.01.2023 -ம் தேதி பெற்றுக்கொள்ளாமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை செலுத்தாமலும்

இருந்து வந்துள்ளதாகவும், எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் புகார்தாரருக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்றும் புகார்தாரர் இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கின் அனைத்து ஆவணங்கள், புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை மற்றும் குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் வழக்கானது 20.03.2023-ம் தேதி கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, STC எண் வழங்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4) குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 204(3)-ன் படி வழக்கின் நகல்கள் எதிரிக்கு அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கு, அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மாறாக எதிரி மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்காக குற்றம் குறித்து வினவப்பட்ட (Substance of Accusation) போது, லோன் வாங்கியிருந்தது உண்மை தான் என்றும், EMI தவறாமல் கட்டியுள்ளேன் என்றும், பொய் வழக்கு என்றும், வழக்கை நடத்த விருப்பம் என்றும் கூறி குற்றத்தை மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6) இவ்வழக்கில் புகார்தாரர் சுரேஷ் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7) புகார்தாரர் தரப்பு சாட்சியின் சுருக்கம்:-**

7.1) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தனது சாட்சியத்தில், எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் Mahindra XYLO D2, Reg No. KA01MH9588 என்ற வாகனத்தை Approved loan அடிப்படையில் loan account no.6752148 -ல் 08.01.2020-ம் தேதி ரூ.3,00,000/-க்கு வாங்கியதாகவும், agreement தொகையாக எதிரி ரூ.4,30,918/-ஐ மொத்த தொகையாக செலுத்த வேண்டும் என்றும், எதிரி மாத தவணையாக ரூ.16,400/- ஐ 29 மாதங்களுக்குள் செலுத்துவதாக ஒப்புக் கொண்டதாகவும், புகார்தாரர் நிறுவனம் பலமுறை எதிரியிடம் கேட்டும், எதிரி தவணை தொகைகளை செலுத்தவில்லை என்றும், loan agreement-ன் நிபந்தனைப்படி புகார்தாரர் நிறுவனம் எதிரியின் வாகனத்தை பறிமுதல் செய்து கொண்டதாகவும், புகார்தாரர் நிறுவனம் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொண்டு விற்பனை தொகையை கழித்தது போக ரூ.3,03,666/- எதிரி நிலுவை தொகையாக செலுத்த வேண்டுமென்றும், மேற்படி கடன் தொகையை செலுத்தும் பொருட்டு full and final settlement ஆக எதிரி ரூ.2,80,000/-த்தை (இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, மேற்படி ரூ.2,80,000/-க்கு கடந்த 08.12.2022 தேதியிட்ட ICICI Bank, Hosur கிளையின் காசோலை எண் 331528 என்ற காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையானது பு.த.சா.ஆ.2 எனவும், மேற்படி 23.12.2021 -ம் தேதியிட்ட Power of Attorney பு.த.சா.ஆ.1 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மேலும் தனது சாட்சியத்தில், மேற்படி

காசோலையை புகார்தாரர் தனது வங்கியான HDFC Bank Ltd, ஒசூர் கிளையில் கடந்த 09.12.2022 அன்று வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலையானது கடந்த 12.12.2022 -ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை பு.த.சா.ஆ.3 எனவும், அதன் பின்னர் 22.12.2022-ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது பு.த.சா.ஆ.4 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை பு.த.சா.ஆ.5 எனவும், மேற்படி 16.12.2022 -ம் தேதியிட்ட Statement of Account பு.த.சா.ஆ.6 எனவும், மேற்படி 08.01.2020 -ம் தேதியிட்ட Loan Agreement பு.த.சா.ஆ.7 எனவும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை திருப்பி செலுத்தாமலும் இருந்து வந்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் எனவும், அவரை தண்டிக்க வேண்டும் எனவும், புகார்தாரருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவேண்டும் எனவும் புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார்.

8) புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த பின்னர் குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழாக, புகார்தாரர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி எதிரியிடம் வினவப்பட்டது, லோன் மூலம் வாகனம் வாங்கியது உண்மை என்றும், பொய் சாட்சி,

லோன் வாங்கும் போது surety க்காக காசோலை கொடுத்தேன் என்றும், காசோலையில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றும், தான் பூர்த்தி செய்யவில்லை என்றும், லோன் தொகையை செலுத்திவிட்டேன், வாகனத்தை பறிமுதல் செய்துவிட்டார்கள் என்றும், பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்.

9) இவ்வழக்கில் எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மேலும் எந்தவொரு ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

11) புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் ரூ.3,00,000/- க்கு வாகன லோன் பெற்று வட்டியுடன் சேர்த்து ரூ.4,30,918/- செலுத்த ஒப்பு கொண்டு கடன் பத்திரம் எழுதிகொடுத்ததாகவும், 6 தவணைகளை மட்டுமே எதிரி செலுத்தியிருப்பதாகவும், மீதி மாதாந்திர தவணைகளை செலுத்தாததால் வாகனத்தை பறிமுதல் செய்து மறுவிற்பனை செய்த தொகையை கழித்தது போக வந்த தொகையான ரூ.3,06,000/-த்தில் ரூ.2,80,000/-ஐ Full and final settlement ஆக புகார்தாரர் நிறுவனத்திற்கு தருவதாக ஒப்புக்கொண்டு, மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி வழக்கு காசோலையை கொடுத்ததாகவும், வழக்கு காசோலை Funds Insufficient என்று திருப்பப்பட்டதாகவும், எதிரி சட்ட அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டதாகவும், புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக

விசாரிக்கப்பட்டு பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பதாகவும், புகார்தாரர் தனது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணம் செய்திருப்பதாகவும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் கூறி வாதிட்டார்.

12) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் ரூ.3,00,000/- க்கு வாகனம் வாங்கி வட்டியுடன் ரூ.4,30,918/- ஐ 24 தவணைகளில் மாதம் ரூ.16,400/- வீதம் செலுத்த வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆனால் பு.த.சா.ஆ.7 கடன் ஒப்பந்த ஆவணத்தில் 23 தவணைகள் என்று குறிப்பிட்ட விவரத்திற்கு முரண்பட்ட வகையில் புகாரில் 29 தவணைகள் என்று குறிப்பிட்டிருப்பதாகவும், எதிரி செலுத்த வேண்டிய 23 தவணைகளை செலுத்திவிட்டதாகவும், 23 மாதங்களுக்கு மொத்தம் ரூ.3,77,200/- தான் வருகிறது என்பதை பு.சா.1 தனது சாட்சியத்தில் ஒப்பு கொண்டிருப்பதாகவும், வாகன கடன் பிரச்சினை தொடர்பாக சென்னையில் தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றும், லோன் போடும் போது எதிரி கொடுத்த காசோலையை வைத்து எதிரிக்கு எதிராக எதிரியிடம் அதிகமாக பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், மேலும் புகார்தாரர் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கூறி எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்து வாதிட்டார்.

13) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் வழக்கு காசோலை பு.த.சா.ஆ.2 ஆனது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா என்பதும் எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தை எதிரி புரிந்துள்ளார் என்பதை புகார்தாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.**

14) இவ்வழக்கில் புகார்தாரருக்கு எதிரி ரூ.2,80,000/- (இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) தரவேண்டும் என்றும், அதற்கு எதிரி ரூ.2,80,000/-க்கு (இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும் அது "Funds Insufficient" என்று திருப்பப்பட்டதாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| **காசோலையில் உள்ள தேதி** | : | 08.12.2022 |
| **காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்ட நாள்** | : | 09.12.2022 |
| **காசோலை திருப்பப்பட்ட நாள்** | : | 12.12.2022 |
| **வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்** | : | 22.12.2022 |
| **வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட நாள்** | : | 02.01.2023 |
| **புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்** | : | 31.01.2023 |
| **புகார் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** | : | 20.03.2023 |

15) மேற்கூறிய சங்கதிகள் அனைத்தையும் கவனிக்கும்போது மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின் கால வரையறைக்குள் (Limitation period or Statutory

Limitations) இப்புகாரின் வழக்கு மூலமும், ஏனைய பிற சங்கதிகளும் சரியான முறையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் இவ்வழக்கில் புகார்தாரரின் வசிப்பிடம் மற்றும் அவரது வங்கிக் கணக்குள்ள வங்கி, பணபரிவர்த்தனை நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆகியவை HDFC Bank Ltd, ஒசூர் கிளை, ஒசூர் நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையமானது ஒசூர் நகரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் இப்புகாரானது இந்நீதிமன்றத்தின் ஆளுகை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளது. இவ்வாறாக, மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பபட்டுள்ள இவ்வழக்கின் காலவரையறை (Limitation Period), சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு மூலம் (Cause of action) சரியான முறையில் அமைந்துள்ள காரணத்தினாலும், இப்புகாரின் சங்கதிகள் இந்நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளதாலும், இப்புகாரானது இந்நீதிமன்றத்தால் புலன் கொள்ளுதலுக்கு (Taking Cognizance) எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

16) இவ்வழக்கில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலையைப் பொறுத்து வழக்கு காசோலையை எதிரி புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றோ, வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தை எதிரி செய்யவில்லை என்றோ எதிரி தரப்பில் மறுத்தளிக்காத நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழ் வழக்கு காசோலையானது கடனை தீர்க்கும்பொருட்டு எதிரியால் கொடுக்கப்பட்டது என தீர்மானித்து மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான அனுமானம் புகார்தாரருக்கு

ஆதரவாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை மறுத்தளிக்கவேண்டிய பொறுப்பு எதிரிக்கு உள்ள நிலையில் அந்த மறுத்தளித்தலை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும் மற்றும் ஆவணங்களின் மூலமும் மறுத்தலிக்கலாம்.

17) இவ்வழக்கில் எதிரியிடம் குற்றம் குறித்து முதல் முறை வினவியபோது **"லோன் வாங்கியிருந்தது உண்மை தான் என்றும், EMI தவறாமல் கட்டியுள்ளேன் என்றும், பொய் வழக்கு என்றும், வழக்கை நடத்த விருப்பம்"** என்றும் கூறியுள்ளார். மீண்டும் 313 (1) (b) ன் கீழாக எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எதிரியிடம் விளக்கி கேட்ட போது **"லோன் மூலம் வாகனம் வாங்கியது உண்மை என்றும், பொய் சாட்சி, லோன் வாங்கும் போது surety க்காக காசோலை கொடுத்தேன் என்றும், காசோலையில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றும், தான் பூர்த்தி செய்யவில்லை என்றும், லோன் தொகையை செலுத்திவிட்டேன், வாகனத்தை பறிமுதல் செய்துவிட்டார்கள் என்றும், பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை "** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18) புகார்தாரர் நிறுவனத்தில் எதிரி லோன் பெற்றார் என்பதையும், லோன் மூலமாக வாகனம் வாங்கினார் என்பதையும் எதிரி தரப்பில் மறுக்கவில்லை. எதிரி லோன் தொகை முழுவதையும் செலுத்திவிட்டதாகவும், வழக்கு காசோலையை

லோன் வாங்கும் போது செக்யுரிட்டிக்காக கொடுத்ததாகவும் எதிர்வாதம் செய்துள்ளார். இது குறித்து எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போது பு.சா.1 தனது சாட்சியத்தில் **"என்னிடம் காட்டப்படும் கடன் ஒப்பந்த பத்திரத்தில் கடன் தொகை ரூ.3,00,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ரூ.3,00,000/- தொகைக்கு தான் மாத தவணையாக ரூ.16,400 வீதம் மொத்தம் 23 தவணைகள் செலுத்துவதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதன்படி 23 தவணைகளுக்கு சேர்ந்து மொத்தம் ரூ.3,77,200/- என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19) மேற்படி பு.சா.1 ன் சாட்சியத்தையும், பு.த.சா.ஆ.6 ஆவணத்தையும் பரிசீலனை செய்த போது பு.த.சா.ஆ.6 கணக்கு அறிக்கையில் ஒப்பந்த மதிப்பு ரூ.4,30,918/- என்றும், முதல் தவணை 10.02.2020 ல் தொடங்கி 10.06.2022 ல் முடிவடைவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் புகாரில் 29 தவணைகள் என்று கடன் ஒப்பநத் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 23 தவணைகளுக்கு முரணபட்ட வகையில் குறிப்பிட்டு இருப்பதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பு.சா.1 தனது சாட்சியத்தில் **“6 மாதம் Moratorium Waiver கொடுத்த தவணைகளை சேர்த்து 29 ஆக காட்டியுள்ளோம், எனது புகாரில் மாதம் ரூ.16,400/- வீதம் 29 தவணைகள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கொரானா காலம் காரணமாக மார்ச் 2020 முதல் ஆகஸ்ட் 2020 வரை Moratarium applied என்று 6 மாதங்களுக்கு தவணை தொகை

செலுத்துவதில் இருந்து விலக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக புகார்தாரர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த விவரம் பு.த.சா.ஆ.6 கணக்கு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 23 தவணைகளுக்கு செலுத்த வேண்டிய லோன் ஒப்பந்த தொகை ரூ.4,30,918/- என்று வழக்கிலும், பு.த.சா.ஆ.7 கடன் ஒப்பந்த ஆவணத்திலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.4,30,918/- தொகையை பொறுத்து எதிரி தரப்பில் மறுத்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

20) மேலும் எதிரி தரப்பில் எதிரி செலுத்த வேண்டிய 23 தவணைகளை செலுத்திவிட்டதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரி 23 தவணைகளை செலுத்தினார் என்பதற்கு எதிரி தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. உண்மையாகவே எதிரி 23 தவணைகளை செலுத்தியிருந்தால் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பு.த.சா.ஆ.6 லோன் கணக்கு அறிக்கையை குறிப்பிட்டு எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்து 23 தவணைகளை எதிரி செலுத்தியுள்ளார் என்று நிரூபணம் செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு எதிரி தரப்பில் பு.த.சா.ஆ.6 லோன் கணக்கு அறிக்கை குறித்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் பு.த.சா.ஆ.6 லோன் கணக்கு அறிக்கையில் எதிரி 6 மாதங்களுக்கான தவணைகளை மட்டுமே தொகையாக ரூ.97,100/- செலுத்தியிருப்பதாக பு.த.சா.ஆ.6 வங்கி கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

21) மேற்படி எதிரி அனைத்து தவணைகளையும் செலுத்திவிட்டார் என்று சொல்லும் எதிரியே அக்கூற்றை நிரூபிக்க வேண்டும். எதிரி 23 தவணைகளை செலுத்தியுள்ளார் என்பதற்கு எதிரி தரப்பில் எந்த சாட்சிய சான்றாவணங்களும் முன்வைக்கப்படவில்லை. மேலும் எதிரி லோன் போடும் போது வழக்கு காசோலையை surety க்காக கொடுத்ததாக எதிர்வாதம் செய்துள்ளார். எதிரி லோனுக்கான அனைத்து தவணைகளையும் செலுத்திவிட்ட பிறகு எதிரி புகார்தாரர் நிறுவனத்திடம் லோன் போடும் போது surety க்காக கொடுத்த காசோலையை திரும்ப பெறுவதற்கு ஏன் எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும் லோனுக்கான அனைத்து தவணைகளையும் செலுத்திவிட்ட பிறகும் புகார்தாரர் நிறுவனம் வாகனத்தை பறிமுதல் செய்துவிட்டார்கள் என்று சொல்லும் எதிரி புகார்தாரர் நிறுவனத்திற்கு எதிராக ஏன் காவல் நிலையத்தில் புகாரோ அல்லது வழக்கறஞர் அறிவிப்போ போன்ற சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கும் எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

22) மேலும் எதிரி தரப்பில் எதிரி தவணை தொகைகள் அனைத்தையும் புகார்தாரர் நிறுவனத்தில் பணிபுரிந்த நாராயணன் என்ற நபரிடம் செலுத்திவிட்டதாக எதிர்வாதம் செய்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் விதமாக எதிரி தரப்பில் எந்த சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்து தனது வழக்கை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிரி உண்மையாகவே

அனைத்து தவணைகளையும் செலுத்தியிருந்தால் எதிரி தரப்பில் நாராயணை ஒரு சாட்சியாக அழைத்து விசாரணை செய்து தனது எதிர்வாதத்தை நிரூபித்திருக்கலாம். ஆனால் எதிரி தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மாறாக புகார்தாரர் தரப்பில் தனது வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

23) இவ்வாறாக புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதின் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும், ஆவணங்களை தாக்கல் செய்வதன் மூலமும், மறுத்தளிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

24) The Hon'ble Apex court has also held in **Rohitbhai Jivanlal Patel Vs State of Gujarat and another reported in (2020) 3 SCC (cri) 575** that the accused leads evidence to rebut presumption by probable defense is not adequate.

25) It has also been held in **Bir Singh V.Mukesh Kumar (2019) 4 SCC 197** that, a blank signed cheque leaf, voluntarily signed and handed over by the accused to the complainant, which is towards some payment, would attract presumption under Section 139 of the NI Act, in the absence of any cogent evidence to show that the cheque was not issued in discharge of a debt.

26) It has also been held in **Rangappa Vs Sri Mohan AIR 2010 SC 1898** that, The presumption referred to in Section 139 of N.I Act is a mandatory

presumption and not a general presumption. The burden upon the defendant of proving the non-existence of the consideration can be either direct or by bringing on record the preponderance of probabilities by reference to the circumstances upon which he relies. In case, where the defendent fails to discharge the initial onus of proof by showing the non-existence of the consideration, the plaintiff would invariably be held entitled to the benefit of presumption arising under Section 118(a) in his favour. The bare denial of the passing of the consideration apparently does not appear to be any defence. Something which is probable has to be brought on record for getting the benefit of shifting the onus of proving to the plaintiff. To disprove the presumption, the defendant has to bring on record such facts and circumstances upon consideration of which the court may either believe that the consideration did not exist or its non-existence was so probable that a prudent man would, under the circumstances of the case, act upon the plea that it did not exist.

27) மேற்படி முன் தீர்ப்புகளையும், மேற்படி விவரங்களையும் இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது எதிரி தரப்பில் சொல்லியுள்ள எதிர்வாதங்களை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139-ன் கீழான அனுமானத்தை புகார்தாரருக்கு அளித்து புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்சொன்ன விவரங்களை

கருத்தில் கொண்டு பார்க்கும்போது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 139 மற்றும் 118 (அ)-ன் கீழ் எதிரி முரண்பாடுகளை மெய்ப்பிக்கவில்லை என்றும் மெய்ப்பிக்கும் பொறுப்பானது புகார்தாரரின் மீது எதிரியால் மறுக்கத்தக்க சாட்சியங்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் வாயிலாக திருப்பப்படவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இது அழைப்பாணை வழக்கு என்பதால் தண்டனைக் குறித்த விவரங்கள் கு.வி.மு.ச. பிரிவு 248 (2)-ன் கீழ் எதிரியிடம் வினவப்படவில்லை.

28) வழக்கு காசோலையை பொறுத்து எதிரிக்கு சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு - 138 ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று தீர்மானிக்கிறது.

**29) முடிவாக,**

**எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்காக குற்றவாளிக்கு 6 மாத கால மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் வழக்கு காசோலையின் இரட்டிப்பு மதிப்பான ரூ.5,60,000/-ஐ (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அபராத தொகையாக புகார்தாரருக்கு கு.வி.மு.ச.357-ன் கீழ் 2 மாதத்திற்குள் இழப்பீடாக வழங்கவும், அபராதத்தை கட்ட தவறினால் மேலும் ஒரு மாத காலம்**

**மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் உத்திரவிடப்படுகிறது.**

30) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:**

1) பு.சா.1 - திரு.சுரேஷ் - புகார்தாரர்

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| 1) | 23.12.2021 தேதியிட்ட Power of Attorney – Notarized Copy | பு.த.சா.ஆ.1 |
| 2) | 08.12.2022 -ம் தேதியிட்ட ரூ.2,80,000/- (331528) க்கான ICICI Bank வங்கி காசோலை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.2 |
| 3) | 12.12.2022 -ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.3 |
| 4) | 22.12.2022 -ம் தேதியிட்ட வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு -நகல் மற்றும் அஞ்சலக ரசீது - அசல் | பு.த.சா.ஆ.4 |
| 5) | சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை - அசல் | பு.த.சா.ஆ.5 |

| | | |
|---|---|---|
| 6) | 16.12.2022 -ம் தேதியிட்ட Statement of Account - .அலுவலக நகல் | பு.த.சா.ஆ.6 |
| 7) | 08.01.2020 - ம் தேதியிட்ட Loan Agreement - உண்மை நகல் | பு.த.சா.ஆ.7 |

**எதிரி தரப்பு சாட்சிகள் : இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்: இல்லை**

**சான்று பொருட்கள்: இல்லை**

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**குறிப்புகள்**:

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.
2. வழக்கு முடிவடைந்ததை பற்றி புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டது.